
உ
சிவமயம்



முரசுமோட்டை, கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும்
திருவையாறு, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்களான

**சந்திரேஸ்வரன் கிந்துநாளன்**

**சந்திரேஸ்வரன் சிந்துஜா**

அவர்களினது சிவபதமடைந்த

# நினைவுக் கருவூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரசுமோட்டை, கிளிநொச்சியைப்

பிறப்பிடமாகவும்

திருவையாறு, கிளிநொச்சியை

வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

***சந்திரேஸ்வரன் கிந்துநாளன்***

அமரர்

***சந்திரேஸ்வரன் சிந்துஜா***

அவர்களினது சிவபதமடைந்த

# நினைவுக் கருவூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது வாழ்க்கை எனும் ஓடத்திலே
ஒளிக்கீற்றுக்களாகத் தோன்றி
எமது இதயத்திலே ஆழப்பதிந்த
எமது அன்புக்கண்மணிகளே!
உங்கள் நினைவுகள் என்றும்
பசுமரத்தாணி போல பதிந்திருக்க...
உங்கள் நினைவுகளைச் சுமந்துவர
இம்மலரினை உங்களுக்கு காணிக்கை
ஆக்குகின்றோம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



**இனித்திருக்க**
**02.11.1985**

**தவித்திருக்க**
**20.04.2009**

அமரர்

# சந்திரேஸ்வரன் கிந்துநாளன்

அவர்கள்

**திதி வெண்பா**

ஆண்டு விரோதி சித்திரைத்திங்கள்
பூண்ட ஏகாதசித்திதி - ஆண்டவனை
நாடி கிந்துநாளன் எமைவிட்டு
வீடுற்ற மேன்மைத் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



இனித்திருக்க
21.05.1987

தவித்திருக்க
20.04.2009

அமரர்

## சந்திரேஸ்வரன் சிந்துஜா

அவர்கள்

திதி வெண்பா

ஆண்டு விரோதி சித்திரைத்திங்கள்
பூண்ட ஏகாதசித்திதி - ஆண்டவனை
நாடி சிந்துஜா எமைவிட்டு
வீடுற்ற மேன்மைத் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

விருது குன்றமா மேருவில் நாணரா
வாவனலெரி யம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றி நின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மா தோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கடையவனேனைக் கருணையினாற் கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதிகண்டாய் விறல் வேங்கையின்றோல்
உடையவனே மன்னும் உத்தரகோச மங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரானென்னைத் தாங்கிக் கொள்ளே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
தித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவாளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமன வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ் பாடி
முத்தனா மாறெனப் பெரு வாழ்வில்
முத்தியே சேர்வதற்கு கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத்தினி பாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

இயற்கை எழில் கொஞ்சும் நீர்வளமும் நிலவளமும் நிறைந்த இலங்கை எனும் தீவிலே யாழ்ப்பாணம். எனுஊரிலே பிறந்த சிவக்கொழுந்து சந்திரேஸ்வரன் என்பவருக்கும் முரசுமோட்டை கிளிநொச்சி எனுமிடத்தில் பிறந்த இராசையா யோகராணி என்பவருக்கும் ஏற்பட்ட திருமண பந்தத்தின் பிரகாரம் இல்லற வாழ்வின் சிறப்பாக வாழ்ந்துவரும் காலத்திலே முதலாவது மகனாக கிந்துநாளனும், இரண்டாவது மகளாக சிந்துஜாவும், மூன்றாவது மகனாக துஜிதனும் மூன்று முத்துக்களாகப் பிறந்து சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்து வந்தார்கள்.

இவர்களுள் மூத்தமகனான சந்திரேஸ்வரன் கிந்துநாளன் கிளி / கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயத்தில் பயின்று க.பொ.த சாதாரணதரப் பரீட்சையின் பின்பு தந்தையாரின் இயந்திரவியியல் தொழிற்பேட்டையில் தந்தையுடனிணைந்து இயந்திரவியல் துறையில் சிறந்து விளங்கினார். இயந்திரவியற் துறையில் சிறந்த அறிவைத் தனது தந்தையிடமிருந்து கற்றுப் பயின்று தனது தந்தைக்கு சிறந்த சேவையை வழங்கியதுடன் தொழிற்பேட்டையை மேலும் விரிவாக்குமளவிற்கு சிறப்பாக இயங்கி வந்தார். இவரது திறமையையும், சிறப்பையும் கண்டு பலர் வியந்த நாட்களும் உண்டு.

மற்றையவர் சிந்துஜா தனது கல்வியை திருவையாறு மகாவித்தியாலயத்தில் பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கலைத்துறையில் மிகுந்த ஆர்வமுடையவராகக் காணப் பட்டார். பெண்மை எனும் வரைவிலக்கணத்திற்கு அமைய சிறந்த குணவியல்புகளை இவரிடத்தில் காணக்கூடியதாக இருந்தது. தனது உற்றார் உறவினர்களுடன் அன்பாகவும் இனிமை ஆகவும் வளர்ந்து வந்தார். என்பது குறிப்பிடத்தக்கது. குடும்பத்தின் அனேக பொறுப் புகளை தானாகவே முன்வந்து சிறப்பாக செய்து முடித்துவிடுவார். என்பது இங்கு குறிப்பிடத்தக்க இன்னுமொரு அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து மூன்றாவதாக துஜிதன் தனது க.பொ.த.சா/ த, உ /த என்பவற்றினை கிளி/திருவையாறு மகாவித்தியாலயத்தில் பயின்று கொண்டிருந்தவர். இவரும் மேற்சொன்ன சகோதரன், சகோதரி போன்றவர்கள் போல சிறந்தவராக மிளிர்ந்து காணப்பட்டார்.

இவர்களின் எதிர்காலக் கனவுகளும், எண்ணங்களும் வளர்ந்துவரும் காலம் கனவுகளும், எண்ணங்களும் சரியத் தொடங்கியது. நாட்டுச்சூழல் எம்மை எமது மண்ணை விட்டு துரத்தியது. பொருள் இழப்புக்களோடு கிடைத்த உடமைகளோடு இடம் பெயர்வுகளுக்கு ஆளானோம். எத்தனை துயரங்கள் வரினும் மனம்தளராது இறைவன்மீது நம்பிக்கையோடு பல்வேறு உள்ளக இடப்பெயர்வுகளுக்கு ஆளானோம்.

எனினும் எமது வாழ்க்கையில் காலன் புகுந்து கொண்டானோ என்னவோ எமது இரு மலர்களான கிந்துநாளன், சிந்துஜா இருவரையும் எங்கிருந்தோ வந்த செல் ஒன்று பதம் பார்த்தது. எம் இரு கண்மணிகளையும் பறித்த கொடுமையை எம்முயிருள்ள வரை மறப்பதென்பது இயலாத கொடுமையாகி விட்டது.

சரி இளையவனாவது எம்முடனிருப்பான் என்று நம்பியிருக்க அவனின் கதையோ விடைகாணா புதிர்களாக உள்ளது. ஆண்டவன் இனியாவது ஒரு கடைக்கண் பார்வைகூட பார்க்கமாட்டானா? என எமது மனம் மன்றாடுகின்றது. ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மண்டார் வருவரோ மாநிலத்தே.....

என்பதை நினைவில் நிறுத்தி எமது இரு கண்மணிகளின் பிரிவினைஏற்று அவர்களின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கேதார கௌரி காப்பு

விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின்றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்றமொடு பொருட் குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்பாள் தாயாளே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமாக தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கைக் கொண்டவளே சுந்தரமுகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசுரனை கூறுபோட்டவளே
அசுரர்குணம் யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையாற்றுப் படலமிதை வழிவழியாக காட்டிடுவீர்
நெறியறியாது திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளுந் தேவியளே
காப்பைக் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்க வென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை யற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புதினதவதித் தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தித் தாயவளே
ஏட்டுடைத் தேவியளே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளி மகாதேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் ஏத்துபுழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பியணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா
காப்புக்கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காண்கின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோல் கன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதானே சோதிமிகு காப்பதனை
இருபத்து நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்திமனதுடனே பரவி அணிவோர்க்கு
சித்தியெலாம் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால உணர்வுமுண்டு
இச்சகதி யெல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரி காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வரமுன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியளே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

"அம்பிகை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தடிகள் பாடல்

ஒன்றென் றிருதெய்வ முண்டென்றிருவுயர் செல்வ மெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே.

என் செயலாவதி யாதொன்றுமில்லை இனித் தெய்வமே
உன் செயலே என்று உணரப் பெற்றேனிந்த வூனெடுத்த
பின் செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவோ

பிறந்தன இறக்கும், இறந்தன பிறக்கும்
தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்கும், சிறுத்தன பெருக்கும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவிற்
குறிக்குஞ் செல்வஞ் சிவன்தந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவாதிருக்க வரம் பெறவேண்டும் பிறந்துவிட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார் புகழ்தில்லை யம்பலவாண ரடிக்கமலம்
மறவாதிரு மனமே யதுகாண் மருந்துனக்கே.

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன ஆவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னையொருவர் அடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையும் தீமையும் பங்கயத்தோன்
எழுதாப் படிவருமோ சலியாதிரு என் ஏழை நெஞ்சே.

நன்னாரிற் பூட்டிய சூத்திரப் பாவை நன்னார் தப்பினாற்
தன்னாலுமாடிச் சலித்திடுமோ அந்தத் தன்மையே போல்
உன்னால் யானும் திரிவதல்லால் மற்றுனைப் பிரிந்தால்
என்னா லிங்காவதுண்டோ இறைவா கச்சியேகம்பனே.

கையொன்று செய்ய விழியொன்றுநாட கருத்தொன்று எண்ண
பொய்யொன்று வஞ்சக நாவொன்றுபேசப் புலால் கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ்வாறு கொள்வாய் வினை தீர்த்தவனே.

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடி சாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்த
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன் னிமம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லை.

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்கள்

எல்லாம் சிவமே

அப்பனும் அம்மையும் சிவமே
அரிய சகோதரரும் சிவமே
ஒப்பில் மனைவியும் சிவமே
ஓதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசருஞ் சிவமே
தேவாதி தேவருஞ் சிவமே
இப்புவி யெல்லாஞ் சிவமே
என்னை ஆண்டதுஞ் சிவமே.

# நினைவிற்கொள்ள வேண்டியவை

01. பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் புன்னகை செய்யத்தவறாதீர்.
02. தகுதி இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாராட்டத் தவறாதீர்.
03. உண்மையானாலும், பொய்யானாலும் முதலில் நீங்கள் எதையும் சொல்லாதீர்.
04. முடிந்தாலும், முடியாவிட்டாலும் உதவமாட்டேன் எனச் சொல்லாதீர்.
05. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வாய்திறந்து வரவேற்க வேண்டும்.
06. பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் நன்கு உபசரிக்க வேண்டும்.
07. அரைகுறை நண்பராக இருந்தாலும் அப்போதுதான் அறிமுகமான வராயினும் பண்பாகப் பேசுங்கள்.
08. குற்றம் என்றாலும் குறை என்றாலும் பெரிதுபடுத்தாதீர்.
09. ஏற்றுக்கொள்ளமுடியாத கருத்தாக இருந்தாலும் எதிர்வாதம் செய்யாதீர்.
10. நீங்கள் மற்றவர்களை விரும்புங்கள், மற்றவர்கள் உங்களை விரும்புவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க சில வரிகள்

- சந்தோசத்தின் விரோதி சந்தேகம்.
- சிறப்புடன் வாழின் சிரிக்கப்பழகு.
- இறைவனைத் தவிர வேறு எதிலும் மிகுந்த பற்று வைக்கக்கூடாது.
- காற்றாடி காற்றை எதிர்த்தே உயரச் செய்கிறது; காற்றுடன் அல்ல.
- உண்மையான அறிஞன் பிறரைத் தாழ்மையாக எண்ணமாட்டான்.
- புத்தகம் இல்லாத வீடுகள் புழுதிபடிந்த புதைமேடுகள்.
- சேவை செய்பவனிடம் வேற்றுமை கிடையாது.
- கடவுள் நாட்டைப்படைத்தான்; மனிதன் நகரத்தை உருவாக்கினான்.
- பணிபு மனிதனின் வாழ்வை உயர்த்தும்.
- பணத்தை வைத்திருப்பவனுக்கு பயம்; அது இல்லாதவனுக்கு கவலை.
- மறைவில் இருப்பதற்கு மரியாதை உண்டு.
- கடந்த காலத்தைப் பற்றி வருந்தி எதிர்காலத்தை இழக்காதே.
- தெரிந்திரு; தெரியுமென்று இருக்காதே.
- தன்னடக்கம் தலைசிறந்த குணம்.
- வெளிச்சத்தைப் பார் விளக்கைப் பார்க்காதே.
- கோள்கையைக் கைவிடாதவன் நேர்மையானவன்.
- முயற்சி இல்லாத மனிதனை பிணம் என்று கருதவேண்டாம்.
- உயிருக்கு அறிவைத் தருவது திருவருள்.
- உங்களுடைய இலக்கு எப்போதும் உயர்வானதாகவே இருக்க வேண்டும்.
- தர்மத்தைச் செய்யுங்கள், கர்மத்தைச் செய்யாதீர்கள்.
- உழைப்பவர்களுக்கே உண்ணும் உரிமை உண்டு.
- மற்றவர்களைக் கீழே தள்ளிவிட்டு நீ ஏணியில் ஏற முயற்சிக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பருவத்தே பயிர் செய்.
- சந்தேகத்திற்கிடமான நண்பனைக் காட்டிலும் வெளிப்படையான பகைவனே மேல்.
- கிடைத்தபின் வருந்தக்கூடியவற்றை எண்ணாதே.
- படித்தவன் சிந்திக்கின்றான், சிந்திப்பவன் முன்னேறுகின்றான்.
- வறுமை என்பது வரவுக்கு மீறிய செலவு.
- பேசும்போது மாத்திரமல்ல உண்ணும்போதும் நாவை அடக்கு.
- அன்பைவிட மிகச் சிறந்த தர்மம் ஏதுமில்லை.
- அன்பில்லாத வார்த்தை அம்பைவிடக் கொடியது.
- ஆண்டவன் மேல் வைக்கும் ஆசை மட்டுமே ஆனந்தம் தரும்.
- ஆடம்பர வழிபாட்டைவிட ஆத்மவழிபாடு சிறந்தது.
- மகானாக வேண்டாம் நல்ல மனிதனாக இருந்தால்போதும்.
- பணிவானவனே துணிவானவன்.
- ஆண்டவனைத் தவிர அனைத்துமே மாறக்கூடியவைதான்.
- கருணை காட்டத் தெரியாதவனுக்கு கண்டிக்கவும் அதிகார மில்லை.
- மிகச் சிறந்த நல்ல வழிகாட்டி உன் மனச்சாட்சியே.
- நன்மையோ தீமையோ உனக்கு வருவது உன்னிடமிருந்துதான்.
- ஆணவச் சுமை அபாயப் பள்ளத்தில் அழுத்தும்.
- நல்ல எண்ணம் விதையானால் நன்மைச் செடியே முளைக்கும். தற்பெருமை, கோபம், ஆசை இவை தோன்றுமிடத்தையே அழிக்கும்.
- மலையளவு பேச்சைவிட கடுகளவு செயல்பாடே சிறந்தது.
- சுவாசிப்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது இறைபக்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எமது அன்புச் செல்வங்களான

கிந்துஜனன், சிந்துஜா

என்பவர்களின்

பிரிவினை அறிந்து எமது தோளோடு

தோளாக நின்ற எமது அன்பானவர்களிற்கும்.

மற்றும் நேரில் வந்து. கடிதம் . தொலைபேசி

வழியாக ஆறுதல் கூறியவர்களுக்கும்.

நாம் துயருற்று இருக்கும் வேளையில்

எம்மை ஆறுதல்படுத்தி எம்மோடு


நின்று ஒத்துழைப்பு வழங்கிய

அன்புள்ளங்களிற்கும் நன்றிகள் பல கோடிகள்!

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ion.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org